**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 31.03.2020 செவ்வாய்க்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 31.03.2020

**மன்றப்பொருள்:1**

இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவிற்கு தேவையான தூய்மை பாரத இயக்கம், டெங்கு மற்றும் பிறப்பு இறப்பு தொடர்பான பணிகளுக்கு அறிவிப்பு நோட்டீஸ், பேனர்கள் மற்றும் புகைப்படங்கள் போன்றவை பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி செலவுகள் மேற்கொண்டு திரு. எஸ்.அகமது கபீர், துப்புரவு ஆய்வாளர், ரூ. 9595/—க்கு ரசீது வழங்கியுள்ளார். மேற்படி ரசீது தொகை ரூ. 9595/— வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி செலவுகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3340/2016/எச்.2)

---

**மன்றப்பொருள்—2**

உசிலம்பட்டி நகராட்சி 3.3.2020 அன்று மதுரை காமராஜர் பல்கலை கழகத்தில் மு.வ.அரங்கத்தில் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்த Model செய்யும் பணியை உடனடியாக செய்த HI-Tech Builder நிறுவன உரிமையாளர் சி.சுதாகர் என்பவருக்கு ரூ. 12,000/—யை வழங்குவதையும் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்
2.தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன்கீழ் பணிமேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

---

**மன்றப்பொருள்—3**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள உரிய பாதுகாப்பு பொருட்கள் மற்றும் விழிப்புணர்வு நோட்டீஸ்கள் பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் பொருட்கள் வாங்கியதையும் செலவினத்தொகை வழங்குவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 567/2020/எச்.2)

---

**<u>மன்றப்பொருள்—4</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் COVID-19 கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. Surya Agency, Dindigul நிறுவனத்திடமிருந்து பிளிச்சிங் பவுடர், சோடியம் ஹைப்போ குளோரைடு, சோப் ஆயில் மற்றும் லைசால் போன்றவை கொள்முதல் செய்ததற்கும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 5,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி பிரிவு 15—ன்கீழ் பொருட்கள் கொள்முதல் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 576/2020/எச்.2)

---

**<u>மன்றப்பொருள்—5</u>**

இந்நகராட்சி பொதுச்சுகாதார வாகனம் எண். TN-58 AW-3247 டிப்பர் லாரி கிளர்ச் பழுது வேலைகள் அவசர அவசியம் கருதி மதுரை திப்தி ஏஜென்ஸிஸ் பழுது நீக்கம் செய்யப்பட்டது. அதற்கான செலவுத்தொகை ரூ. 2481/—ஐ திரு. எஸ்.ஜெயராஜ்பாண்டி டெக்ஸ்கோ டிரைவர் தனது சொந்த செலவில் மேற்கொண்டுள்ளார். அதற்கான பட்டியல் தொகை ரூ. 2481/—ஐ திரு. எஸ்.ஜெயராஜ்பாண்டி, டெக்ஸ்கோ டிரைவர் அவர்கள் பெயருக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)—ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 2217/2016/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்—6</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (COVID-19) கொரோனா வைரஸ் காய்ச்சல் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படியும், உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்களில் நகராட்சி சார்பாக விழிப்புணர்வு விளம்பரம் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 20,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி விழிப்புணர்வு விளம்பரம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
உசிலம்பட்டி நகராட்சி.